**வாரியபொல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வாரியபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் ரூபா. 278,125 ஆகவிருந்த தெனிபொத்தேலந்த முகலான காணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் ரூபா. 218,125 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சின் முலம் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா. 6,009,602 பெறுமதியான டிபர் வண்டியின் பெறுமதி ரூபா. 8,500,000 என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) 03 தொழில்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 523,775 கடன் பட்டோர் கணக்கிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) வருமானப் பிரிவின் தகவல்களுக்கமைய மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் பிடி ஆணைக் கட்டணம் ரூபா. 6,481,721 ஆகவிருந்த போதும் வருமானச் செலவுக் கணக்கில் அது ரூபா. 5,946,771 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) வருமானப் பிரிவின் தகவல்களுக்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 2,718,850 ஆகவிருந்த போதும் ஐந்தொகையில் அது ரூபா. 2,183,900 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) அட்டவணை மற்றும் பொருட் பரிசீலனை அறிக்கைக்கு அமைவாக ரூபா. 630,997 ஆகவிருந்த மீளாய்வாண்டின் இறுதிக்கான காகிதாதிகள் தொகை ஐந்தொகையில் ரூபா. 443,447 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணங்காத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04 கணக்குத் தலைப்புகளுடன் தொடர்பான நிதிக் கூற்றுக்களுக்கு அமைவான மீதி மற்றும் அட்டவணைக்கு அமைவான மீதிகளுக்கிடையில் ரூபா. 33,610 வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) 09 கணக்குத் தலைப்புகளுடன் தொடர்பான நிதிக் கூற்றுக்களுக்கு அமைவான மீதி மற்றும் நிலையான சொத்துக்கள் அட்டவணை/சபையினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைவான மீதிகளுக்கிடையில் ரூபா. 2,789,301 வித்தியாசம் காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 224,594,623 தொகையான பெறவேண்டிய கணக்குகளில் ஒரு வருடத்தைத் தாண்டியிருந்த ரூபா 1,016,667 இல் ரூபா. 164,250 இனை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதித் தொகையான ரூபா. 852,417 இனை அறவிடுவதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 219,980,516 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளில் 1 தொடக்கம் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து காணப்பட்ட ரூபா 942,971 மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 4,570,926 இனை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல ஆதாரங்கள் காணப்படாமை

தரவுகளைக் கணக்காயிவிற்குச் சமர்ப்பிக்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக மொத்தம் ரூபா. 29,482,198 ஆகவிருந்த 05 கணக்குத் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வருகின்ற தொழில் கடன் பட்டோர் மீதியினை அறிந்து கொள்வதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் முன்னைய வருடத்தினுள் சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த 110 தொழில்களுக்கான ரூபா. 15,893,439 கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிடப்பட்ட போதும் அதை உறுதி செய்வதற்கான எழுத்து மூல ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) டிரக்டருடன் பொருத்தப்படும் ரூபா. 175,000 பெறுமதியான காடு வெட்டும் இயந்திரத்தின் பெறுமதி இயந்திர உபகரணங்களின் கீழ் பதியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்ட போதும் உறுதி செய்வதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) பிரமாணங்கள் 99 விதி | 439,681 | 2017 ஜனவரி மாதத்திற்கான 11 வவுச்சர்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 பெறுகை வழிகாட்டி | | |
| (i) 3.4.2 (அ) வழிகாட்டி | 1,293,925 | விலைமனுக் கோரப்படாது பொருட் பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்யப் பட்டிருந்தன. |
| (ii) 5.6 மற்றும் 6.2.2 வழிகாட்டி | 1,206,338 | விதந்துரைகள் முன்வைக்கப்படாததுடன், தேசிய போட்டி அடிப்படையிலான விலை மனு கோரப்படுவதற்கான குறைந்த கால எல்லை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 6.3.3 வழிகாட்டி | 1,864,713 | விலை மனு திறக்கப்படும் தினம், நேரம் மற்றும் இடம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (இ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபம் | - | வாகனத் திருத்தம் உள்/வெளி என வகைப்படுத்தி சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கை | - | கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான புறம்பான நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 75,388,023 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 61,435,397 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 5,169 | 6,065 | 6,202 | 554 | 4,880 | 5,617 | 5,617 | 692 |
| (ii) | வாடகை | 9,889 | 10,604 | 10,692 | 02 | 9,383 | 9,320 | 9,302 | 90 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 772 | 1,189 | 1,189 | - | 742 | 932 | 932 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 168,084 | 177,085 | 174,442 | 37,557 | 165,095 | 166,207 | 166,208 | 34,914 |
| | மொத்தம் | 183,914 | 194,943 | 192,525 | 38,113 | 180,100 | 182,076 | 182,059 | 35,696 |

**குறிப்பு**

2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 35 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட ரூபா 183 மில்லியனான வருமானத்தில் ரூபா 80 மில்லியன் பட்டிலிடப்பட்டு முன்னைய ஆண்டுகளில் நிலுவையில் பெறுவனவான ரூபா 35 மில்லியனுடன் ரூபா 192 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 35 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 38 மில்லியனாக இருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியன்று ரூபா. 692,000 ஆகவிருந்த வீத வரி நிலுவையில் ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையாக உள்ள ரூபா. 250,559 தொகை 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) பிரமாணம் 32-45 வரை பின்பற்றப்பட்டு அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 141,090 ஆகவிருந்த ஏக்கர் வரி நிலுவையில் ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையாக உள்ள ரூபா. 66,908 மீளாய்வாண்டில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

வருடாந்த விலை மனுக் கோரலின் பிரகாரம் குத்தகைக்கு விடப்பட்டிருந்த 03 சொத்துக்களுடன் தொடர்பான பல வருடங்களாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா. 164,250 இனை அறவிடுவதற்காக சபையினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 வேறு வருமானங்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில் வாகனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம், களி வாகனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் மற்றும் நீர் பவுசர்களுக்கான பெற வேண்டிய வருமானம் முறையே ரூபா. 147,800, ரூபா. 25,250 மற்றும் ரூபா. 64,000 அறவிடுவதற்கான நடவடிக்கைகள் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 அன்று பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,718,850 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 20,000,000 ஆகவிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கமைவாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 520/7 இலக்கம் மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமாணி அறிவித்தலின் மூலம் அமுல்படுத்தப்பட்டிருந்த 39 உப விதிகள்

மற்றும் மாகாண சபையினால் அமுல்படுத்தப்பட்டிருந்த 12 உப விதிகள் சபையினால் பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் 01 உப விதி அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) நிறைவேற்றப்படாத தொழிற்பாடுகள்**

---

2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட ரூபா. 11,350,000 பெறுமதியான 30 தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கழிவு முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா. 7,692,923 செலவிடப்பட்டிருந்ததுடன் உக்கக்கூடிய/உக்காத கழிவுகள் 282 டொன் சேகரிக்கப்பட்டு அதில் உக்கக்கூடிய கழிவுகள் 98 டொன்களினால் 30 டொன் அசேதன உரம் தயாரிக்கப்பட்டிருந்தது. உரம் மற்றும் உக்காத பொருட்களின் விற்பனை மூலம் முறையே ரூபா. 341,070 மற்றும் ரூபா. 128,023 மற்றும் உர வரியாக ரூபா. 351,418 அறவிடப்பட்டிருந்தது.

(ii) முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக சேர்க்கப்பட்ட கழிவுகளின் அளவு 6 வீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

---

''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பான விரிவான அறிவு சபையிடம் இல்லாமல் இருந்ததன் காரணமாக சபையுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான விரிவான அறிவு காணப்படவில்லை. இதன் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிக்கோல்களை அளவிடுவதற்கான அளவுகோல்கள் இனங்காணப்படாதிருந்த போதும் வறுமையை ஒழிப்பதற்கும் சுய தொழில்களுக்காகவும் தேவையான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன. வருமான மட்டம் நிலையாக இல்லாமை, சேவைகளுக்கான தேவைகள் அதிகரித்தல் காரணமாக செலவு அதிகரித்தல் ஆகிய காரணங்களினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவுகளை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் பணி புரியும் சமயோசித ஊழியர்களுக்காக 2001 முதல் 2013 வரை ஊழியர் சேமலாப நிதிக்கான பங்குத் தொகை முறையாகச் செலுத்தப்படாததன் காரணமாக ரூபா. 73,697 மேலதிகமாகச் செலுத்த வேண்டி இருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1597/8 இலக்கம் மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக தொலைபேசி.்.தொலைத் தொடர்பு கோபுரங்களின் உயரம் 5.20 மீற்றர் வரை ரூபா. 20,000 மற்றும் அதிகரிக்கின்ற ஒவ்வொரு மீற்றருக்கும் ரூபா. 100 வீதம் கட்டணம்

அறவிடப்பட வேண்டியிருந்த போதும் 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 06 கோபுரங்களிலிருந்து ரூபா. 111,110 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்பட்ட 29 தொலைபேசி பரிமாற்றுக் கோபுரங்களுடன் தொடர்பான அனுகூலச் சான்றிதழ்கள் பெறப்படாததன் காரணமாக ரூபா. 169,393 சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 23 தொலைபேசி பரிமாற்றுக் கோபுரங்களுடன் தொடர்பாக 2017 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப் பத்திரம் பெறப்படாததன் காரணமாக ரூபா. 69,000 சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 04 இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சன சமூக நிலையங்கள் மற்றும் அதற்கான 04 ஏக்கர் மற்றும் 02 ரூட் காணியினை மதிப்பீடு செய்வதற்கும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இக் காணியினை சபைக்கு பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 02 கப் வண்டிகள் மற்றும் ஒரு கன்டர் லொரியினை சபைக்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா. 550,000 பெறுமதியான பெகோ இயந்திரமொன்றும் ரூபா. 73,500 பெறுமதியான கை டிரக்டர் ஒன்றும் 04 வருட காலமாக பாவிக்கப்படாமல் இருந்தன.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பொருட் பரிசீலனை அறிக்கைக்கமைவாக சபைக்குச் சொந்தமான 10 நூலகங்களில் காணாமல் போயிருந்த ரூபா. 34,653 பெறுமதியான 164 புத்தகங்கள் தொடர்பான நட்டத்தினை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பெறுகை திட்டம்

### 3.5.1 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுவனவுக் கையேட்டின் 3.4 (அ) பிரமாணத்திற்கு முறனாக மற்றும் பெறுகை செயலாற்றுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாது ரூபா. 128,928 பெறுமதியான தீ அணைப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) புதிய காரியாலயக் கட்டடத்திற்கு ரூபா. 1,206,338 பெறுமதியான தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் ஊஊவுஏ கெமராத் தொகுதியொன்றினைக் கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) நிழற்பிரதி இயந்திரமொன்றினைக் கொள்வனவு செய்வதற்கான விலை மனு பெறப்படாது புற நெகும திட்டத்தின் விலைகளின் அடிப்படையில் ரூபா. 142,013 இற்கு ஒரு நிழற்பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பெறுகை செயன்முறை பின்பற்றப்படாது ரூபா. 666,540 பெறுமதியான பெறுவனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

புல்லவ தம்பிடிய ஹீன்பல்லகம எல்லைப் பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 990,922 செலுத்தப்பட்டிருந்தது. இவ் வபிவிருத்தி செய்யப்பட்ட பாதையின் சுமார் 10x 2.6 மீற்றர் அளவு இறங்கியுள்ளதாக 2018 ஜனவரி 28 ஆம் திகதிய பௌதிக பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா. 141,626,266 பெறுமதியான வரவு செலவில் உள்ளடங்காத 115 தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 07 தொழிற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 4,300,000 நிதிக்கு மேலதிகமாக ரூபா. 6,415,254 செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 (நிதி மற்றும் நிர்வாக) பிரமாணம் 5(7) இற்கமைவாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீட்டுச் செயற்பாடு | (I) நிலையான சொத்துக்களை தவறாகக் கணக்கிடல் மற்றும் கணக்கிடாது விடல் |
| | (ii) நடைமுறைச் சொத்துக்களை குறைவாகக் கணக்கிடல் |
| | (iii) வருமானங்களைத் தவறாகக் கணக்கிடல். |
| (ஆ) வருமானக் கட்டுப்பாடு மற்றும் வருமானம் | பெற வேண்டிய நிதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்காமை |

| | | |
|---|---|---|
| | சேகரித்தல் | |
| (இ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (I) செயலற்ற சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) நிலையான சொத்து ஆவணங்கள் இற்றைப்படுத்தப்படாமை |
| | | (iii) நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிடாமை |
| (ஈ) | பெறுகைத் திட்டம் | பெறுகை வழிகாட்டி அறிவுறுத்தல்களுக்கு இணங்க பெறுகைகளை கொள்வனவுகளை மேற்கொள்ளாமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பீடு செய்யப்படாத செயற்பாடுகளை மேற்கொள்ளல் |